# வெளியுறவு அமைச்சரின் அமெரிக்க பயணம் (செப்டம்பர் 22-30, 2023)

செப்டம்பர் 22, 2023

வெளியுறவு அமைச்சர் திரு எஸ் ஜெய்சங்கர் 2023 செப்டம்பர் 22-30 வரை அமெரிக்காவிற்கு பயணம் செய்கிறார்.

செப்டம்பர் 22 முதல் 26 வரை நியூயார்க்கிற்கு அவர் மேற்கொள்ளும் பயணத்தின் போது, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78வது அமர்வில் உயர்மட்ட வாரத்திற்கான இந்தியக் குழுவை வெளியுறவு அமைச்சர் வழிநடத்துவார்.

உலகளாவிய தெற்கிற்கான இந்தியாவின் ஆதரவை வைத்து, வெளியுறவு அமைச்சர் 'உலகளாவிய தெற்கிற்கான இந்தியா-ஐ.நா: வளர்ச்சிக்கான செயல்பாடு' என்ற ஒரு சிறப்பு நிகழ்வை நடத்தும்.

அமைச்சரின் வருகையின் போது, பல்வேறு பன்முக மற்றும் இருதரப்பு சந்திப்புகளில் கலந்து கொள்ள உள்ளார். வெளியுறவு அமைச்சர் ஐ.நா. பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்டெரெஸ் மற்றும் ஐநா பொதுச் சபையின் 78வது அமர்வின் தலைவர் திரு டென்னிஸ் பிரான்சிஸ் ஆகியோரையும் சந்திக்கிறார்.

78வது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் உயர்மட்ட அமர்வில் வெளியுறவு அமைச்சரின் உரை செப்டம்பர் 26ஆம் தேதி முற்பகல் திட்டமிடப்பட்டுள்ளது.

78வது ஐநா பொதுச்சபை தொடர்பான கூட்டங்கள் முடிந்ததும், வெளியுறவு அமைச்சர் அமெரிக்க உயர்மட்ட தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளுக்காக செப்டம்பர் 27 முதல் 30 வரை வாஷிங்டன் டி.சி.க்கு செல்கிறார். அங்கு அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளர் திரு ஆண்டனி பிளிங்கன், அமெரிக்க நிர்வாகத்தின் மூத்த உறுப்பினர்கள், அமெரிக்க வணிகத் தலைவர்கள் மற்றும் சிந்தனைக் குழுக்களுடன் சந்திப்புகளை மேற்கொள்ள உள்ளார். மேலும், வாழும் கலை அமைப்பு ஏற்பாடு செய்துள்ள 4வது உலக கலாச்சார விழாவிலும் வெளியுறவு அமைச்சர் உரையாற்ற உள்ளார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 22, 2023**